

மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலில் அருங்குணம் ஊராட்சி பாகம் 248ல் அடங்கிய சோழந்தாங்கல், மேட்டு தெரு, தெற்கு தெரு, பிராமணர் தெரு, ஏரிக்கரை தெரு, ஆகிய தெருக்களில் ஆலந்தூர் தெற்கு, வடக்குப் பகுதி கழக செயலாளர்கள் என். சந்திரன் எம்.சி., பா. குணாளன் ஆகியோர் தலைமையில், கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வீடு வீடாக சென்று வாக்குகளை சேகரித்தார்.



மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கிணார் ஊராட்சி பாகம் 91 ஏறுப்பாக்கம் கிராமத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி வீடு வீடாக சென்று உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார்.

அக். 6 - அன்று

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீடு முன் ஆர்ப்பாட்டம்!

நெடுஞ்சாலைத்துறை பட்டயப் பொறியாளர் சங்கம் அறிவிப்பு!

விருதுநகர், செப். 29 - நெடுஞ்சாலைத்துறையில் நீடிக்கும் நிர்வாக குளறுபடிகளை சரிசெய்ய கோரி வரும் அக். 6ம் தேதி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீட்டு முன்பு போராட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் மாரிமுத்து வெளியிட்டுள்ள அறிக்கை:

நெடுஞ்சாலைத்துறையில் கடந்த 4 மாதங்களாக நிர்வாக குளறுபடிகள் நீடித்து வருகின்றன. உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி கோட்ட பொறியாளர்கள் பணியிட மாறுதல் வெளிப்படையாக நடைபெறவில்லை.

குறிப்பாக ஒரே இடத்தில் 5 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களை தற்போது வரை பணியிட மாறுதல் செய்யவில்லை. மேலும் பல்வேறு பணி நிலை அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கக் கூடிய பதவி உயர்வுகள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை.

மறுசீரமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு அடிப்படை வசதிகளும் முறையாக செய்து தரவில்லை.

புதிய சாலை மற்றும் பாலப்பபணிகள் சம்பந்தமாக மதிப்பீடு தயார் செய்வதற்கு உரிய செலவினங்களை உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்கள் எந்த அடிப்படையில் பெற வேண்டும் என்ற நிர்வாக உத்தரவுகள் இல்லை.

இதனால் பல ஆயிரம் செலவு செய்த உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோர் பெரும் மனஉளைச்சலில் உள்ளனர்.

எனவே, இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் சார்பில், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீடு முன்பு அக். 6ம் தேதி பெருந்திரள் முறையீடு போராட்டம் நடத்துவது என முடிவு செய்துள்ளோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணவம்.....!

ஆசைக்கு இணங்கும்
"எந்திரங்கள்" இருக்க
ஆதவ்-களுக்கு
ஆணவச் சவால்கள்
சாதாரணம் தானே ...

ஆனாலும்
ஒன்று

தேங்காயோ
பூசணியோ

தலைக்கு மேலே தூக்கப்படுவது
எல்லாமும்
ஓர் நாள்

தரையில்
போட்டு

உடைக்கப்படும்...

விசிலுக்கு
சங்கு ஊதும் வேளை
விரைந்து வருகிறது..

என்னநாஞ் சொல்றது..



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து,புக்கத்துறை ஊராட்சி,பஜனை கோயில் தெருவில் உள்ள வாக்காளர்களிடம்,சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனையின் பேரில்,பெரம்பூர் தொகுதி,44 வது வட்ட செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் தலைமையில் எஸ்.கார்த்திகேயன், பில்டர் பி.ரவி,ப.பிரதீப், ஆ.ராதா கிருஷ்ணன், அ.வெங்கடேசன், மோகன் மற்றும் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

வ.பெ.சுரேஷ் தலைமையில்

புக்கத்துறை ஊராட்சியில் வாக்கு சேகரிப்பு!

கழகத்தினர் பங்கேற்பு!

மதுராந்தகம், செப். 29- மதுராந்தகம் தொகுதியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனைபடி புக்கதுறை ஊராட்சி சமத்துவபுரம் 14ம்பாகத்தில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் அண்ணன் வ.பொ.சுரேஷ் தலைமையில் வட்ட செயலாளர்கள் இரா.பாலன் ரவி, கௌளீஸ்வரன், பாலலட்சுமணன் ஆர்.வி.லஷ்மிவேலு முன்னிலையில் மகளிர் அணி சார்பாக உதயசூரியன் சின்னத்தில் வீடு வீடாக சென்று வாக்குகள் சேகரித்தனர். உடன் சக்தி, ரகு, மலையம்மா மகேஸ்வரி, கோமதிபொற்செழியன், பூங்கோதை உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம், மேல்மா கிராமத்தில் மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ.வேலு எம்.சி, தலைமையில் பகுதி கழக அவைத் தலைவர் தில்லை குமார், 78(அ) வட்ட கழக செயலாளர் நா.பாலு முன்னிலையில் எழும்பூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் என்.மோகன் குமார்,எழும்பூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.வின் மாமியார்

பிரேமா ராஜகுமாரி அம்மையார் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 29 -

திருவாரூர் மாவட்டக் கழகச்செயலாளரும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே. கலைவாணன் அவர்களின் மாமியார் பிரேமா ராஜகுமாரி அம்மையார் (82) அவர்கள் 27.09.2026 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பிரேமா ராஜகுமாரி அம்மையாருக்கு கென்னடி, ராஜராஜன் என்கின்ற இரு மகன்களும், நளினி, ரஷ்யா, சிந்தனை, இந்திரா ஆகிய நான்கு மகள்களும் உள்ளனர்.

பிரேமா ராஜகுமாரி அம்மையாரின் மறைவு தகவல் றிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.வின் மாமியார்

பிரேமா ராஜகுமாரி அம்மையார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், செப். 29 - திருவாரூர் மாவட்டக் கழகச்செயலாளரும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே. கலைவாணன் அவர்களின் மாமியார் பிரேமா ராஜகுமாரி அம்மையார் (82) அவர்கள் 27.09.2026 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பிரேமா ராஜகுமாரி அம்மையாருக்கு கென்னடி, ராஜராஜன் என்கின்ற இரு மகன்களும், நளினி, ரஷ்யா, சிந்தனை, இந்திரா ஆகிய நான்கு மகள்களும் உள்ளனர். இதில் சிந்தனை அவர்கள் திருவாரூர் மாவட்டக்கழகச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் மனைவி ஆவார்.


பிரேமா ராஜகுமாரி அம்மையாரின் மறைவின் தகவலறிந்து கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் மற்றும் உறவினர்களும் அம்மையாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த பிரேமா ராஜகுமாரி அம்மையாரின் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (28.9.2026. திங்கட் கிழமை) மாலை 4 மணி அளவில் தஞ்சாவூர் கணபதி நகரில் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. முனியசாமி

செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.பா.சா.பன்னீர்செல்வம்

செப்டம்பர் 29 (2014)



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.